பொள்ளாச்சி வாசி

ஆசிரியர் P.S. வேலுசாமி வியாழன் வெளியீடு.

போர் 1. | பொள்ளாச்சி. 5—7—51. விலை அரையணா. | ஷர் 2

ஸ்ரீ எஸ். வி. அய்யங்கார் நன்கொடை.

நமது ஸ்ரீ எஸ். விஜயராகவ அய்யங்கார் பி. ஏ. பி எல். அவர்கள் தமது பாட்டனாகிய சமுத்தூர் ராமய்யங்காரின் நினைவுச்சின்னமாக, அன்னாரின் பெயரால் ஓர் உயர்நிலைப்பள்ளி ஏற்படுத்த் ரூ. 20000 இருபதாயிரம் நகரசபைக்கு நன்கொடையாக அளித்துள்ளார்கள். ஷெ பள்ளியின் ஆரம்ப விழா சென்ற 24...6...51 ல் ஸ்ரீ பி. நாச்சிமுத்துக் கவுண்டர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஸ்ரீ எஸ். வி. அய்யங்கார் அவர்கள் இம்மாதிரியான பொதுக்காரியங்களுக்கு ஊக்கம் காட்டி பல நன்கொடைகள் அளித்து வருவதைப்பாராட்டுகிறோம். நகரத்தில் பல தண்ணீர்க் குழாய்களையும், பல ரஸ்தாக்களையும் அவர் ஏற்படுத்தியுள்ளார். பொதுவாகப் பொதுக்காரியங்கள் எதற்கும் முன் வந்து அவ்வப்போது தாராளமாக உதவி செய்து வரும் ஸ்ரீ அய்யங்காரின் தாராள மனப்பான்மையைப் பெரிதும் பாராட்டி வரவேற்கிறோம்.

ரேஷன் அட்வைசரிக் கமிட்டிக் கூட்டம்.

30...6...51 மாலை 5–மணிக்குரேஷன் ஆபீஸில் ஸ்ரீ பி கே, தர்மலிங்கக்கவுண்டர் தலைமையில் நடைபெற்றது. ரேஷன் குற்றங்கள் ரேஷன் அதிகரித்திருப்பது ஸ்டாக் நிலைமை முதலியவை குறித்து ரேஷன் ஆபீஸர் ஸ்ரீ எம். நடராஜ முதலியார் விளக்கமாகப் பேசினார். தேனீர் விருந்துக்குப்பின் கூட்டம் கலைந்தது.

ஹரிஜன தினம்.

30–தேதி காலையில் ஷெ தினவிழா வடுகபாளையம் ஹரிஜனசேரியில் ஸ்ரீ பி. எஸ் சுப்பையன் தலைமையில் நடைபெற்றது ஷெ விழாவிற்கு புதிய உதவி கலெக்டர் ஸ்ரீ சீனிவாசன், தாசில்தார், ரெவின்யூ இன்ஸ்பெக்டர் ஆகியோர் வந்து சிறப்பித்தனர். ஸ்ரீ நாகப்ப பிள்ளை, வ. பா. அக்கலாஞ் செட்டி, பி. ஆர். கிருஷ்ணசாமி பி ஏ., ம வெங்கட்ராமக் கோனார் ஆகியோர் ஹரிஜன தினம், மகாத்மா காந்தியடிகள் பணி, ஹரிஜன முன்னேற்றம் ஆகியவைகளைப்பற்றி பேசினார்கள்.

கனம் ஸ்ரீ பக்தவத்சலம்.

மராமத்து இலாகா மந்திரி கனம் பக்தவத்சலம் அவர்கள் 1-7-51 ல் ஆனைமலைக்கு விஜயம் செய்தார் ஸ்ரீகிருஷ்ணசாமிக் கவுண்டர் இல்லத்தில் தேநீர் விருந்து நடைபெற்றது. பஞ்சாயத்து போர்டு பொன்விழா ஸ்ரீ வி. கே. பழனிசாமிக்கவுண்டர் தலைமையில் நடைபெற்றது. கனம் மந்திரி அவர்கள் விழாவை ஆரம்பித்து வைத்தார். கொடியேற்று விழா ஸ்ரீ கந்தசாமிக்கவுண்டர் நடத்தினார். ஸ்ரீ மாசாணி வந்தனம் கூற விழா இனிது முடிந்தது.

தமிழ்!

"இளங்கதிர்"

பாரில் இனியது நம் மொழி
பண்பில் இனியது நம் மொழி.
காரில் வான் சிறத்தல் போல்
காவில் சிறக்கும் தமிழ் மொழி.
தாழ்வு வந்து சேரினும்
தன்மை குறையா நம் மொழி.
சாதி பேத மற்றுமே - வீண்
சமய பேதம் விட்டுமே.
ஆதி தொட்டு உலகிலே
ஆதி மொழி நம் மொழி.
மொழியும் நாடு கூட்டியே
மூவேந்தர் ஆட்சி செய்ததும்.
மொழியின் கதை கூறுதும்
முத்தமிழ் ஆட்சி சிறந்ததை
வழி யதிலே நாமினி - தமிழர்
வாழ்வு மலரச் செய்குவோம்.

நேயர் தபால்.

தற்சமயம் நகர ரேஷனிங் ஆபீஸில் பு... தாக பங்கீடு கார்டுகள் வாங்குபவர்களுக்... அவரவர்கள் சௌகரியப்பட்ட கடைகளி... அல்லாமல் எஸ். வி. வி. நாயுடுவீதியில் இரு... க்கும் 23-நம்பர் ரேஷன் ஷாப்பில் தான்... வாங்கவேண்டுமென்றும் இல்லா விட்டால்... ரேஷன் கார்டு கொடுப்பதில்லை என்றும்... ரேஷன் ஆபீஸரும், ரேஷன் கார்டு கொடு... கும் குமாஸ்தாவும் கண்டிப்பாய் சொல்லி... விடுகிறார்கள். பொள்ளாச்சி மரப்பேட்டை... வீதியிலிருக்கும் ஒருவரும், கோட்டாம்பட்டி... ரோட்டிலிருக்கும் ஒருவரும், வண்ணாந்துறை... ரோட்டிலிருப்பவரும், ஊத்துக்காடு ரோட்... டில் குடியிருப்பவரும் எஸ். வி. வி. நாயு... வீதியில் இருக்கும் கடைக்கு ரேஷன் வாங்... கப் போவதென்றால் ஒரு நேர வேலை வீணா... கிவிடுகிறது. ஆகையால் நகர ரேஷனிங் ஆபீ... ஸர் அவரவர்கள் குடியிருக்கும் அந்த வீதி... யிலோ அடுத்தவீதியிலோ இருக்கும்ரேஷன் ஷாப்பில் ரேஷன் கார்டுகளை பதிவுசெய்யும்... படி உத்திரவு கொடுப்பதுதான் நியாயமென்... பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

[என். வி. ராஜகோபால்]

செல்வாக்கு மிகுந்த தமிழ்
வாரப்பத்திரிகை.

பொள்ளாச்சி வாசி

பொள்ளாச்சி 5—7—51. வியாழன்.

மின்சார இலாகா தூங்குகிறது!

இம்மாதம் முதல் வாரத்தில் ஒரு நாள் இரவு 12-மணிக்கு நகர் பூராவும் லைட் இல்லை. சினிமா நின்றுவிட்டது. எந்தவீட்டில் லைட் போட்டாலும் கரண்ட் இல்லை. தெரு விளக்குகள் இல்லை. இதை மின்சார அதிகாரிகள் கவனித்து கரண்ட் கொடுக்க அடுத்த நாள் பகல் 1-மணியாயிற்று. இதே மாதிரி அதற்கு முதல்நாளும் இரவில் கரண்ட் நின்று போய்விட்டது. அநேகமாக தினமும் இம்மாதிரி நிலைமைதான் பல சந்தர்ப்பங்களில் வீடுகளில் கரண்ட் கிடைப்பதில்லை. இதை அதிகாரிகள் கவனிப்பதாகவே தெரியவில்லை ஏதோ பெயருக்கு வந்து சாவதானமாக ரிப்பேர் வேலை தொடங்குகிறார்கள். ஒரு நாள் பூராவும் ஊரில் கரண்ட் இல்லை என்றால் அதனால் எவ்வளவு அபாயங்களும் கஷ்ட நஷ்டங்களும் ஜனங்களுக்குச்சிரமமும் உண்டாகிறது என்பதை மின்சார இன்ஜினீர்கொஞ்சமாவது உணர்ந்தாரா? தன்னுடைய பொருட்டை உணர்ந்து கடமையை நிறை வேற்றுகிறாரா? அல்லது தனக்கு சொந்த இருக்கிறது வேலையைப்பற்றி கவலை இல்லை என்ற மமதையில எதையும் கவனியாமல் அசிரத்தையாய் இருக்கிறாரா? இரவு பூராவும் கரண்ட் இல்லாமல் மக்கள் பட்ட அவஸ்தைக்கு யார் பொருப்பு எங்கோ ஒரு இடத்தில் ஒரு சிறு கோளாறு ஏற்பட்டதை சரி செய்ய 25-மணி நேரமா? பிடித்தது. வேலையின் சுறு சுறுப்பு ஆமை வேகத்தில் இருப்பதின் காரணம் என்ன, மின்சார இலாகா முனிசிபல் நிர்வாகத்தில் இருப்பதாலா? அல்லது முனிசிபல்நிர்வாகம் சரியானபடி மின்சார இலாகாவை கண்காணிப்பதில்லையா? சர்க்கார் நிர்வாகத்திற்குப் போனால் எல்லாம் ஒழுங்காக நடக்குமா? நகரில் மின்சார இலாகா சரியானபடி வேலைசெய்வதில்லை என்பது மறுக்க முடியாத உண்மை, அதன் காரணம் மின்கார இன்ச்னீயரின் திறமைக் குறைவு தான். ஆகவே சர்க்கார் உடனடியாகக்கவனித்து திறமையுள்ள இஞ்ஜினீயரைபொள்ளாச்சிக்குநியமிப்பார்களாக. ஒருநாள்மட்டுமல்லா பல நாட்கள் ஒருவித எச்சரிக்கையுமின்றி கரண்ட் இருப்பதில்லை. இதை கொஞ்சங் கூட இன்ஜினீயர் கவனிப்பதாகத் தெரியவில்லை. உடனடியாய் முனிசிபல் கவுன்சில் தகுந்தநடவடிக்கைஎடுக்கக் கோறுகிறோம்

"தேசத்தொண்டன்."

கதை வசனம் - அ. பாசித்.
பாடல்கள் - பி. எம். என். சாமி.
பி. ஆர். சின்னப்பா, பாண்டியன்.
மேக்கப் - கே. கே. துரை,
எம். எஸ். அண்ணாமலை.
டைரெக்ஷன் - ஆர். வாசுதேவன்.

நடிகர்கள் - ஆர். வாசுதேவன், அ. பாசித் ஆர், தங்கவேல், பாண்டியன், மைதீன், சி. டி. பி. சிங், பி. ஆர். சின்னப்பா பி. என் எம் சாமி, ஆர் ஷண்முகம், பி ஏ. குழந்தைவேலு சோமசுந்திரம், சிறுவன் ஆர். லக்ஷிமிநாராயணன், என். டி. முருகானந்தம், கே. வேலுச் சாமி மற்றும் பலர்.

தேசத்தொண்டன் பார்ப்பதற்கு பரவசமாகவும் உணர்ச்சியூட்டக்கூடியதாகவும் இருந்தது: தமிழ்நாட்டின் தலைவர் ஸ்ரீ காமராஜ் அவர்கள் இந்நாடகத்தைப் பார்த்துப் பரவசமடைந்து பாராட்டினார். இதுபோன்ற நாடகத்தைத் தான் வரவேற்பதாகவும் கூறினார். அமைச்சூர் நடிகர்களெல்லாம் நல்ல முறையில் தங்கள் பாத்திரத்தை உணர்ந்து நடித்தார்கள். ஆர். வாசுதேவன் அவர்களின் டைரெக்ஷன் போற்றக் கூடியதாக இருந்தது. பாடல்கள், மேக்கப், காட்சி ஜோடனைகள் நன்கு அமைந்திருந்தன. மொத்தத்தில் எல்லோரும் போற்றக்கூடிய நாடகம். இதனை இவ்வளவு சிறப்புறச்செய்த அனைவருக்கும் குறிப்பாக டைரெக்டர் ஆர். வாசுதேவன், காந்தீய ஊழியர்சங்க காரியதரிசி வி, வேலுசாமி காங்கிரஸ் கமிட்டித்தலைவர் எம். ராமசாமி, காரியதரிசி காதர்மைதீன் மற்றவர்களையும் நாம் மிகவும் பாராட்டுகிறோம்.

சந்திரன் காலேஜ் ஸ்கூல்,
298, இடையர் வீதி, கோயமுத்தூர்.
ஒரு வருஷத்தில் 14-வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண்கள் E. S. L. C. ஸிக்கும், 20-வயதுக்கு மேற்பட்டவர்கள் மெட்ரிகுலேஷனுக்கும், 9-ம் வகுப்புவரை ஹைஸ்கூல்களிலும் சேரலாம். S. S. L. C. இண்டர் வகுப்புகள் உண்டு. ஹாஸ்டல் உண்டு.
தலைவர்:- S. R. Chandran.

இளைஞர் காங்கிரஸ்.

1—7—51 ல் ஞாயிறு காலையில் சின்னம்பாளையம் கிராமத்தில் இளைஞர் காங்கிரஸ் சொற்பொழிவுக்கூட்டம் ஸ்ரீ கே. தங்கவேலு அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அது சமயம் இளைஞர் காங்கிரஸும் சர்க்காரும் என்பது பற்றி பொள்ளாச்சி காரியதரிசி அ: பாசித், சி, டி. பி, சிங், சதாசிவம், சின்னசாமி, எம். கந்தசாமி ஆகியோர் பேசிய பின்னர் சின்னம்பாளையம் கிராமத்திற்கு தபால் சரிவர குறித்த காலத்திற்கு கிடைக்காததால அக் கிராமத்திற்கு ஒரு சிறிய போஸ்டாபிஸ் அல்லது குறித்த காலத்தில் தபால் கிடைக்கும்படி வசதி செய்ய சம்மந்தப்பட்ட அதிகாரிகளை கேட்டுக்கொண்டு ஓர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பொள்ளாச்சி பஜார்!

சுந்திரம் ஜுவல்லரி மார்ட்,
நாகமாணிக்கம் செட்டியார் & பிரதர்,
கடை வீதி.

மாடர்ன் கபே,
போர்டிங் & லாட்ஜிங்,
கடை வீதி & கச்சேரி வீதி.

S. P. M. கொடி மஜீத்பீடி,
அங்கு விலாஸ் கடை,
ஏஜண்டு: A. S. P. செட்டியார்.

P பட்டாபி செட்டியார்,
ஜெனரல் மர்ச்சண்ட்,
கடை வீதி.

S. R. V. லாட்ஜிங்கில்
சுகாதார முறைப்படி நல்லகாற்றோட்டமுள்ள ரூம்கள் வாடகைக்கு விடப்படும்

கூடச்சூடா!?

(அ, பாசித்.)

சீர் திருத்தம்பற்றி ஈ. வெ. ரா. சேலத்தில் பேசினார். [செய்தி]

சீர் திருத்தம் பற்றி இவரா பேசினார்என்று ஆச்சரியப்படுகிறாள் 73-வயது குடு குடுப் பாட்டி.

கருப்புக்கு மறுப்பு. [ஒரு பத்திரிகை.]

மறுப்புக்கு மறுப்பு எழுதவேனென்று வெறுப்புடன் கூறுகிறார் ஒரு கருப்பு ஆசாமி!

கவுண்டர் & கம்பெனி

லிமிடெட்,

கூட்ஷெட் ரோடு, பொள்ளாச்சி.

போர்டு; செவர்லெட்

இதர மோட்டார்களுக்கு அவசியமான உறுப்புகள்,

டயர், டியூப்புகள், பேட்டரி வகைகள்

விற்பனை செய்யப்படும்.

பஸ், லாரி பாடிகள் போட்டுக்கொடுப்பதுடன்,
எல்லாவிதமான மோட்டார் ரிப்பேர்களும்
செய்து கொடுக்கப்படும்.

அறிவிப்பு.

உறுதிக்கும், நேர்த்தியான வேலைப்பாட்டிற்கும்
சிக்கனத்திற்கும் உத்திரவாதமுள்ள

டால்மியா போர்ட்லண்டு

சிமிட்டியை

யாவரும் எளிதில் பெற்று உபயோகிக்கும் பொருட்டு

பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, பழனி

ஆகிய இடங்களில் கடைகள்
திறக்கப்பட்டிருக்கின்றன.

நா. மகாலிங்கம்,

டால்மியா சிமிட்டி ஏஜண்டு, பொள்ளாச்சி.

போன் நெம்பர். 63.

தபால் பெட்டி நெ. 25.

N.B :— ரெடிமேடு பவுன் நகைகள் உத்திரவாதத்துடன் கிடைக்கும்.

Prop: B. பாலமாணிக்கம் செட்டியார் & பிரதர்ஸ்.

Edited & Published by P. S. Veluswamy, Printed at the Sri Devi Press, Rajamill Road, Pollachi.